**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**ஸ்ரீரங்கம்,**

**முன்னிலை : திரு.K.விஜய் ராஜேஷ், எம்.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஸ்ரீரங்கம்.**

**2026–ம் ஆண்டு ஜீன் திங்கள் 23–ஆம் நாள், செவ்வாய்கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 37/2019**

**CNR.NO.TNTP19001614 2019**

| | |
|---|---|
| குற்றமுறையிடுபவர் | அரசுக்காக ஸ்ரீரங்கம் சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலையம், உதவி ஆய்வாளர் அவர்கள், குற்ற எண். 57/2018 |
| குற்றஞ்சாட்டப்பட்டவர் | எதிரிகள்:<br>1. திரு.சூர்யபிரகாஷ் (வயது குறிப்பிடவில்லை ) த/பெ.செல்வம்<br>2. திரு. விக்னேஷ் (வயது குறிப்பிடவில்லை ) த/பெ. சுப்ரமணி |
| குற்றப்பிரிவு | இ.த.ச. பிரிவு 294(b), 324 |
| வனையப்பட்டது | இ.த.ச. பிரிவு 294(b), 324 |
| தண்டிக்கப்பட்டது | **எதிரிகள் ஆஜர். திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்புரை பகரப்பட்டது.**<br>**இறுதியாக, அரசு தரப்பில் எதிரிகள் மீது இதச பிரிவு 294(b), 324–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார் என அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை குற்றவாளி இல்லையென முடிவு செய்து கு/வி/மு/ச 248(1)–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.** |
| தீர்மானம் | எதிரிகள் குற்றவாளி இல்லை |

குற்றம் சாட்டப்பட்டவர் விபரம்

| வ. எண் | பெயர் | த/பெ. | மதம் | தொழில் | குடியிருப்பு | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1 | திரு.சூர்ய பிரகாஷ் | திரு. செல்வம் | இந்து | கூலி | C–23, மணல்மேடு, 5 வது பிரகாரம், திருவானைக்கோவில், திருச்சி | – |
| 2 | திரு.விக்னேஷ் | திரு.சுப்ரமணி | இந்து | கூலி | C–7, 5 வது பிரகாரம், மணல்மேடு, திருவானைக்கோவில், திருச்சி | – |

தேதி விவரங்கள்:–

| | | |
|---|---|---|
| நிகழ்வு நாள் | : | 16.01.2018 |
| புகார் | : | 17.01.2018 |
| கைது தேதி | : | 19.01.2018 |
| பிணை விடுவிப்பு | : | 19.01.2018 |
| Committal | : | N.A |
| விசாரணை துவக்கம் | : | 13.06.2018 |
| விசாரணை முடிவு | : | 23.06.2026 |
| எதிரி காவலில் இருந்த நாட்கள் | : | N.A |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | : | 07.04.2018 |
| Date of Questioning | : | 11.07.2018 |
| இடையீட்டு மனுக்கள் மற்றும் அதன் முடிவு | : | N.A |
| சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதிகள் | : | PWs Chief — Cross<br>(1) 23.01.2019 — 23.01.2019<br>(2) 23.01.2019 — 23.01.2019<br>(3) 09.01.2019 — 09.01.2019<br>(4) 21.12.2021 — 21.12.2021<br>(5) 21.12.2021 — 21.12.2021<br>(6) 17.05.2022 — 17.05.2022<br>(7) 28.06.2022 — 28.06.2022 |

| | | |
|---|---|---|
| சட்டப்பிரிவு 313(1)(b) கு.வி.மு.ச – விசாரணை தேதி | : | 22.06.2026 |
| தலைமறைவு எதிரிகளின் விபரம் அவர்கள் கைது செய்த விவரம் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | : | Nil |
| மேலவை நீதிமன்றங்களால் தடையாணை வழங்கப்பட்ட விவரம் அதன் முடிவு | : | Nil |
| காலதாமதத்திற்கான காரணம் | : | Nil |

இவ்வழக்கானது திருச்சிராப்பள்ளி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3 ல் CC.No.107/2018 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்னர் மாறுதல் மூலம் இந்நீதிமன்றத்தில் கடந்த 26.12.2019 ம் தேதியன்று CC. No. 37/2019 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இறுதியாக 23.06.2026 –ம் தேதியன்று விசாரணைக்கு வரப்பெற்று, அரசு தரப்பில் **உதவி வழக்குரைஞர் நிலை 2 அவர்களும்**, எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி. S.ஸ்ருதி சொர்ணம் அவர்களும் ஆஜராகி செய்த வாதுரைகளை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

## தீர்ப்புரை

இவ்வழக்கானது புகார்தாரரால் குற்றவியல் விசாரணை முறைச்சட்டப்பிரிவு 173(2)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின்படி எழுந்த வழக்காகும்.

2. **குற்ற முறையீட்டாளரின் சுருக்கம்:-**

கடந்த 16.01.2018ம் தேதி காலை இவ்வழக்கின் வாதி பன்றியை விற்பனைக்கு எடுத்து சென்றதை பார்த்த 1வது எதிரி மேற்படி பன்றி தனக்கு சொந்தமானது என கூறிய போது பன்றி யாருடையது என இருவரும் பேசி தீர்த்து கொள்ளலாம் என்று தங்களது தெருவிற்கு வந்த 2வது எதிரி அழைத்து பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளார்கள். சம்பத்தின் தொடர்ச்சியாக 16.01.2018ம் தேதி காலை 11.20 மணியளவில் திருச்சி மாநகரம் ஸ்ரீரங்கம் காவல் நிலைய சரக எல்லைக்குட்ப்பட்ட திருவானைக்கோவில் வடக்கு 5ம் பிரகாரம் மணல் மேடு எதிரி சூர்யபிரகாஷ் என்பவர் வீட்டு முன்பு வாதிக்கும் எதிரிகளுக்கும் உள்ள பிரச்சனை சம்பந்தமாக பேச்சு வார்த்தையின் போது வாதிக்கும் எதிரிகளுக்கும் வாக்கு வாதம் ஏற்பட்டுள்ளது . அப்போது வாதியை பார்த்து எதிரிகள் இரண்டு பேரும் புண்டை மவனே எதுடா உன் பன்னி என்று அசிங்கமாக திட்டியும், 2வது எதிரி விக்னேஷ் அருகில் கிடந்த கட்டானை எடுத்து வாதியின் தலையில் அடித்து காயத்தை ஏற்படுத்திய எதிரிகளின் செய்கையானது இதச பிரிவுகள் 294(b), 324 ன் கீழ் குற்றம் என்று இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. குற்றப்பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டு எதிரிகள் முன்னிலையான உடன் அவர்களுக்கு வழக்காவணங்களின் நகல் கு.வி.மு.ச பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பின்பு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து, இருதரப்பு கேட்கப்பட்டும் எதிரிகளுக்கு எதிராக கு.வி.மு.ச. பிரிவு 240(1)-ன் படி எதிரிகளின் செய்கையானது இதச பிரிவுகள் 294(b), 324

கீழ் அவரிடம் விளக்கி வினவியபோது எதிரிகள் பொய்வழக்கு குற்றவாளி இல்லை என கூறியதால் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. **விசாரணை**:-

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ. 9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5. **அரசு தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்** :-

(1) **அ.சா.1 திரு. நவநீத கிருஷ்ணன்** தனது சாட்சியத்தில் தான் தற்போது திருவானைக்கோவில் மணல்மேட்டில் வசித்து வருவதாகவும், தான் கறிக்கடை தொழில் செய்து வருவதாகவும், ஆஜர் எதிரிகளை தனக்குத் தெரியும் என்றும், கடந்த ஜனவரி 14.01.2018ம் தேதியன்று திருவானைக்கோவில் சீமெண்ணை பங்கிலிருந்து பன்றியை பிடித்துக்கொண்டு வந்ததாகவும், அப்போது எதிரிகள் காந்தி சிலை அருகே தன்னை மறித்து பன்றி அவர்களுடையது என்று சொன்னதாகவும், தான் பன்றி உங்களிடம் வாங்கியது தான் என்று சொன்னதாகவும், அதில் வாக்கு வாதம் ஏற்பட்டதால் 1ம் எதிரி வீட்டிற்கு சென்று பன்றியை அங்கு போட்டுவிட்டு பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருந்தபோது 1ம் எதிரி 2ம் எதிரிக்கு போன் செய்து அவரை அழைத்ததாகவும், 2ம் எதிரி அங்கு வந்த போது தன்னை புண்டைமகனே என்று திட்டிவிட்டு சவுக்கு கட்டையால் தன்னை தலையில் 2ம் எதிரியும், 1ம் எதிரியும் சேர்ந்து தன்னை அடித்ததாகவும், தான் கீழே விழுந்து விட்டதாகவும், தன்னுடைய மனைவி தன்னை அரசு

மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும், போலீசார் தன்னை மருத்துவமனையில் வந்து விசாரித்ததாகவும், தன்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றதாகவும், தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், மேற்படி புகார் அ.சா.ஆ.1 என்றும், தன்னிடம் காட்டப்படும் கட்டை அ.சா.பொ.1 என்றும், அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளார்.

(2)அ.சா.2 **திருமதி .வினோதினி** தனது சாட்சியத்தில் தான் தற்போது திருவானைக்கோவில் மணல்மேட்டில் வசித்து வருவதாகவும், தான் பல்மருத்துவமனையில் வரவேற்பாளராக வேலை செய்து வருவதாகவும், அ.சா.1 நவநீதகிருஷ்ணன் தனது கணவர் என்றும், ஆஜர் எதிரிகளை தனக்குத் தெரியும் என்றும், 16.01.2018 ம் தேதியன்று மண்ணென்னை பங்கு என்ற இடத்திலிருந்து வளர்ப்பு பன்றி வாங்கி விற்பதற்காக ஸ்ரீரங்கம் வந்ததாகவும், காலை 11.00 மணியளவில் சூர்யா என்பவர் வீட்டிற்கு முன்னால் சூர்யா , விக்னேஷ் தனது கணவரை அசிங்கமான வார்த்தையால் திட்டிவிட்டு உருட்டுக்கட்டையால் இருவரும் தன் கணவரின் தலையில் அடித்துவிட்டதாகவும், தன் கணவர் ரத்தக் காயம் ஏற்பட்டு மயங்கி விழுந்துவிட்டதால் ஒரு ஆட்டோ பிடித்து அவரை ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம் என்றும், அ.சா.2 சாட்சியம் அளித்துள்ளார் .

(3) அ.சா.3 **திரு.மாரிமுத்து** தனது சாட்சியத்தில் தான் தற்போது நைனாபுரம் மணல்மேட்டில் வசித்து வருவதாகவும், வீட்டு புரோக்கராக இருப்பதாகவும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும் தனது உறவினர்கள் ஆவார்கள் என்றும், சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று அ.சா.3 சாட்சியம் அளித்துவிட்டு

அரசு தரப்பு சாட்சியத்தில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்.

(4)அ.சா.4 **திரு. சின்னராஜ்** தனது சாட்சியத்தில் தான் தற்போது திருவானைக்கோவிலில் வசித்து வருவதாகவும், தான் ஓட்டுனராக உள்ளதாகவும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், சுமார் 3 வருடங்களுக்கு முன்பு தான் வீட்டிற்கு சாப்பிட சென்ற போது போலீசார் தன்னிடம் கையெழுத்து கேட்டதாகவும், எதற்காக என்று தெரியாது என்றும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், சுப்பிரமணியன் மகனான அ.சா.1 நவநீதகிருஷ்ணனை தெரியும் என்றும், தாங்கள் ஒரே பகுதியில் வசிப்பவர்கள் என்றும், பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து அ.சா.ஆ.2 என்றும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து அ.சா.ஆ.3 என்றும், அ.சா.4 சாட்சியம் அளித்துவிட்டு அரசு தரப்பு சாட்சியத்தில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்.

(5)அ.சா.5 **திரு. பாபு** தனது சாட்சியத்தில் தான் தற்போது ஸ்ரீரங்கம் ரயில்வே ஸ்டேசன் ரோட்டில் வசித்து வருவதாகவும், தான் கொல்லர் பட்டரையில் வேலை பார்த்து வருவதாகவும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது இல்லை என்றும், அ.சா.5 சாட்சியம் அளித்துவிட்டு அரசு தரப்பு சாட்சியத்தில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்.

(6) அ.சா.6 **திரு. ஆனந்தகுமார்** தனது சாட்சியத்தில் ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருவதாகவும், தான் கடந்த 16.01.2018 அன்று காலை 11.30 மணிக்கு தான் ஸ்ரீரங்கம் அரசு

மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரில் பணியில் இருந்தபோது வினோதினி என்பவரால் அழைத்துவரப்பட்ட திரு. நவநீதிகிருஷ்ணன் என்பவரை தான் பரிசோதித்தபோது அவர் தன்னை தெரிந்த இரு நபர்கள் கட்டையால் தன் வீட்டிற்கு அருகில் வைத்து அடித்ததாக கூறியதாகவும், அவரை பரிசோதித்தபோது 2x1x0.05 செ.மீ சிதைந்த காயம் முன் தலையில் இருந்ததாகவும், அவரை ஆண்கள் அறுவை சிகிச்சை வார்டில் சிகிச்சைக்கு அனுமதித்தாகவும், அவருக்கு மூளையில் ஸ்கேன் செய்ய பரிந்துரைத்தேன் என்றும், அவருக்கு ஸ்கேன் செய்து இருந்தால் காயத்தின் தன்மை குறித்து குறிப்பிட்டு சான்று வழங்கியிருக்க இயலும் என்றும், அவர் 20.01.2018 அன்று தன்னிச்சையாக மருத்துவமனையில் இருந்து வெளியேறிவிட்டதாகவும், அவர் மருத்துவர் ஆலோசனையின்றி சிகிச்சையில் இருந்து வெளியேறிவிட்டதால் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து கருத்துரை வழங்க இயலாது என்று சான்றிதழ் வழங்கினேன் என்றும் , அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய சான்று அ.சா.ஆ. 4 என்றும், மேற்படி காயத்தின் தன்மை சாதாரண காயம் என்று கைவசம் உள்ள விபத்து பதிவேட்டின் அடிப்படையில் கூறியதாகவும், இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்ததாகவும், அ.சா.6 சாட்சியம் அளித்துள்ளார்.

(7) அ.சா.7 **திரு. அழகர்** தனது சாட்சியத்தில் தான் தற்போது நாவல்பட்டு காவலர் பயிற்சி பள்ளியில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இதற்கு முன்பு கடந்த 2018 ஆண்டு ஸ்ரீரங்கம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 17.01.2018 அன்று நிலைய பொறுப்பில்

இருந்தபோத அன்றைய தினம் ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் இருந்த கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த திருவானைக்கோவில் மணல்மேடு சார்ந்த சுப்பிரமணி மகன் நவநீதகிருஷ்ணன் எனப்வரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து மனு எண். 27/2018 கொடுத்து மேற்படி மனுவை விசாரித்து 19.01.2018 அன்று காலை 09.30 மணிக்கு நிலைய குற்ற எண். 57/2018 சட்டப்பிரிவு 294(பி), 324 இதச படி வழக்கு பதிவு செய்தேன் என்றும், தான் பதிந்த அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 என்றும், பின்னர் அன்றைய தினம் 10.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சின்ராஜ் , பாபு ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன் என்றம், அது. அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 என்றும், பின்னர் சம்பவ இடத்திலிருந்து வழக்கின் தடய பொருளான சுமார் 2 அடி நீளமுள்ள கட்டான் ஒன்றினை அன்றைய தினம் 11.00 மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்னிலையிலேயே மகஜரில் கைப்பற்றினேன் என்றும், அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.8 என்றும், அந்த வழக்கு சொத்தினை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன் என்றும், அந்த படிவம் 91 அ.சா.ஆ.9 என்றும், பின்னர் சாட்சிகள் வினோதினி, மாரிமுத்து, சின்ராஜ், பாபு ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், மேற்படி சாட்சியங்கள் வாக்கு மூலத்திலிருந்து விசாரணையிலும் வழக்கு சம்பவம் உண்மையென்று தெரியவந்ததால் ஆஜர் எதிரிகளை கைது செய்ய தேடியபோது அன்றைய தினம் 12.45 மணிக்கு திருவானைக்கோவில் சன்னதி வீதி நாலுகால்

மண்டபம் அருகே நின்று கொண்டிருந்த எதிரிகளை காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன் என்றும், பின்னர் காயம்பட்ட அ.சா.1 க்கு சிகிச்சையளித்த ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு. ஆனந்தகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன் என்றும், மேலும் மருத்துவர் காயம்பட்ட அ.சா.1 மருத்துவரின் அனுமதியின்றி சிகிச்சையைவிட்டு வெளியேறிவிட்டதால் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து சான்று வழங்க இயலாது என்று தெரிவித்ததாகவும், பின்னர் தனது புலன் விசாரணையை முடித்து எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதியறிக்கைய கடந்த 15.02.2018 அன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றும், அ.சா.7 சாட்சியம் அளித்துள்ளார்.

6. **கு.வி.மு.ச பிரிவு 313–ன் படியான நடவடிக்கை:–**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாகத் தோன்றிய சந்தர்ப்பங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் படி கேள்விகள் கேட்க, எதிரிகள் அதை மறுத்துக் கூறினார்கள் . எதிரிகள் தரப்பில் சாட்சியம் எதுவும் முன்வைக்கப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

7. **தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:–**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது எதிரிகள் மீது இதச பிரிவு 294(b), 324 அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

8. **தீர்வு** :–

I) கடந்த 16.01.2018 ம் தேதி காலை இவ்வழக்கின் வாதி பன்றியை விற்பனைக்கு எடுத்து சென்றதை பார்த்த 1 வது எதிரி மேற்படி பன்றி தனக்கு சொந்தமானது என கூறிய போது பன்றி யாருடையது என இருவரும் பேசி தீர்த்து கொள்ளலாம் என்று தங்களது தெருவிற்கு வந்த 2 வது எதிரி அழைத்து பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளார்கள். சம்பத்தின் தொடர்ச்சியாக 16.01.2018 ம் தேதி காலை 11.20 மணியளவில் திருச்சி மாநகரம் ஸ்ரீரங்கம் காவல் நிலைய சரக எல்லைக்குட்ப்பட்ட திருவானைக்கோவில் வடக்கு 5 ம் பிரகாரம் மணல் மேடு எதிரி சூர்யபிரகாஷ் என்பவர் வீட்டு முன்பு வாதிக்கும் எதிரிகளுக்கும் உள்ள பிரச்சனை சம்பந்தமாக பேச்சு வார்த்தையின் போது வாதிக்கும் எதிரிகளுக்கும் வாக்கு வாதம் ஏற்பட்டுள்ளது . அப்போது வாதியை பார்த்து எதிரிகள் இரண்டு பேரும் புண்டை மவனே எதுடா உன் பன்னி என்று அசிங்கமாக திட்டியும், 2 வது எதிரி விக்னேஷ் அருகில் கிடந்த கட்டானை எடுத்து வாதியின் தலையில் அடித்து காயத்தை ஏற்படுத்திய எதிரிகளின் செய்கையானது இதச பிரிவுகள் 294(b), 324 ன் கீழ் குற்றம் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

ii) அ.சா.1 புகார்தாரர் சாட்சியான நவநீதகிருஷ்ணன் தனது சாட்சியத்தில் " **என்னிடம் புகார் வாக்குமூலும் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்."**

புகார்தாரர் சாட்சியான அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் " **எழுத்து பூர்வமான எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ தினத்தன்று சம்பவம் நடந்த இடத்தில் யார் யார் இருந்தார்கள் என புகார்**

**வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 சவுக்கு கட்டை இல்லை என்றால் என்னை கட்டையால் தான் அடித்தார்கள். சவுக்கு கட்டை என்று தெரியாமல் தான் சொன்னேன். "** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும் அ.சா.1 புகார்தாரர் சாட்சியான நவநீதிகிருஷ்ணனை கடந்த 09.12.2025ம் தேதியன்று குறுக்கு விசாரணை செய்தபோது அ.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் **" எனக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் பிரச்சனை உள்ளதா என்றால் இல்லை. ஏற்கனவே புகார் கொடுத்திருப்பதாக சொல்லப்படும் புகாரில் என்ன விவரம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஏற்கனவே முதல் விசாரணையில் கூறிய விவரங்கள் போலீசார் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். எந்த காலத்திலும் எனக்கும் எதிரிக்கும் பிரச்சனை இருந்தது இல்லை என்றால் சரிதான். "** என்று அ.சா.1 புகார்தாரர் சாட்சி அரசு தரப்பு சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளிக்காமல் அரசு தரப்பு சாட்சியத்தில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்கள்.

அ.சா.2 வினோதினி தனது குறுக்கு விசாரணையில் **" எனது கணவர் புகார் கொடுத்துள்ள சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது கணவருக்கும் எதிரிகளுக்கு எந்தவித பிரச்சனையும் இருந்தது இல்லை என்றால் சரிதான். "** என்று அ.சா.2 சாட்சி அரசு தரப்பு சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளிக்காமல் அரசு தரப்பு சாட்சியத்தில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும் அ.சா.3 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் அனைவரும் அரசு தரப்பு சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளிக்காமல் அரசு தரப்பு சாட்சியத்தில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும் அ.சா.6 ஆனந்தகுமார் மருத்துவர் அ.சா.1 க்கு சிகிச்சையளித்தது பற்றியும், அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை பற்றியும் கூறுகிறார். மேலும் மருத்துவர் ஆனந்தகுமார் அ.சா.1 பரிசீலனை செய்து பார்த்தபோது " **கடந்த 16.01.2018 அன்று காலை 11.30 மணிக்கு நான் ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பரிவில் பணியில் இருந்தபோது வினோதினி என்பவரால் அழைத்துவரப்பட்ட திரு. நவநீதிகிருஷ்ணன் என்பரை நான் பரிசோதித்தபோது அவர் தன்னை தெரிந்த இரு நபர்கள் கட்டையால் தன் வீட்டிற்கு அருகில் வைத்து அடித்ததாக கூறினார். அவரை பரிசோதித்தபோது 2x1x0.05 செ.மீ சிதைந்த காயம் முன் தலையில் இருந்தது. அவரை ஆண்கள் அறுவை சிகிச்சை வார்டில் சிகிச்சைக்கு அனுமதித்தேன். அவருக்கு மூளையில் ஸ்கேன் செய்ய பரிந்துரைத்தேன். அவருக்கு ஸ்கேன் செய்து இருந்தால் காயத்தின் தன்மை குறித்து குறிப்பிட்டு சான்று வழங்கியிருக்க இயலும். அவர் 20.01.2018 அன்று தன்னிச்சையாக மருத்துவமனையில் இருந்து வெளியேறிவிட்டார். "** என்றும்

மேலும் அ.சா.6 மருத்துவர் ஆனந்தகுமார் அவரது குறுக்கு விசாரணையில் **" மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் எந்த ஆயுதம் மூலம் ஏற்பட்டிருக்க கூடும் என்று கருதுகிறேன் என்றால் அவர் தன்னை கட்டையால் அடித்ததாக சொன்னார். ஆனால் என்னால் உறுதியிட்டு கூற முடியாது. மேற்படி காயம் கீழே**

**விழுந்தால் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் ஆமாம். கட்டையால் அடித்து இருந்தால் பெரிய அளவில் காயம் ஏற்பட்டிருக்கும் நான் சொல்லும் அளவிலான காயம் ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. கட்டையால் அடித்து இருந்தால் வீக்க காயம்தான் ஏற்பட்டிருக்கும் என்றால் இருக்கலாம்."** என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே அ.சா.6 சாட்சியம் அரசு தரப்பு சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேலும் அ.சா.7 உதவி ஆய்வாளர் சாட்சியத்தை உறுதியூட்டு விதமாக தனிநபர் எவரும் இல்லாததால் தனிநபர் எவரும் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், மேலும் அ.சா.7 உதவி ஆய்வாளர் அவர்களை சாட்சியத்தை மட்டுமே எதிரிகள் தான் குற்றவாளி என்று இந்நீதிமன்றம் முடிவு செய்ய இயலாது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்ய இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, அரசு தரப்பில் எதிரிகள் மீது இதச பிரிவு 294(b), 324 – ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார்கள் என அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நீரூபணம் செய்யாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை குற்றவாளி இல்லையென முடிவு செய்து எதிரிகளை குற்றவாளி இல்லையென முடிவு செய்தும், கு/வி/மு/ச 248(1)–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

எதிரிகள் எழுதிக் கொடுத்துள்ள பிணையப்பத்திரமும் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகிவிடும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

இந்த வழக்கில் வழக்கு சொத்தான திருச்சிராப்பள்ளி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3 ல் (RP.No. 188/2018) சுமார் 2 அடி நீளமுள்ள கட்டான் ஒன்றை மேல்முறையீடு காலத்திற்க்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் திருத்தம் செய்யப்பட்டு, 2026–ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 23 ஆம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

VIJAIRAJESH K Digitally signed by VIJAIRAJESH K Date: 2026.06.23 15:05:20 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஸ்ரீரங்கம்.

**இணைப்பு :**

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

அ.சா 1 : திரு. நவநீத கிருஷ்ணன்
அ.சா 2 : திருமதி. வினோதினி
அ.சா 3 : திரு. மாரிமுத்து
அ.சா 4 : திரு. சின்னராஜ்
அ.சா 5 : திரு. பாபு
அ.சா 6 : திரு. ஆனந்தகுமார் ( மருத்துவர்)
அ.சா 7 : திரு. அழகர் (காவல் உதவி ஆய்வாளர்)

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்:–**

அ.சா.ஆ. 1 : 23.01.2019 புகார்
அ.சா.ஆ. 2 : 21.12.2021 பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து
அ.சா.ஆ. 3 : 21.12.2021 கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து
அ.சா.ஆ. 4 : 17.05.2022 விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று
அ.சா.ஆ. 5 ; 28.06.2022 அச்சு முதல் தகவல் அறிக்கை
அ.சா.ஆ. 6 ; 28.06.2022 பார்வை மகஜர்
அ.சா.ஆ. 7 ; 28.06.2022 மாதிரி வரைபடம்
அ.சா.ஆ. 8 ; 28.06.2022 கைப்பற்றுதல் மகஜர்
அ.சா.ஆ. 9 ; 28.06.2022 படிவம் 91

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்று பொருள்கள்:– உண்டு**

**1. அ.சா.பொ.1 –** சுமார் 2 அடி நீளமுள்ள கட்டான் ஒன்று

**எதிரி தரப்பில் சாட்சிகள் :–** இல்லை

**எதிரி தரப்பில் சான்றாவணம் :–** இல்லை

VIJAIRAJESH K
Digitally signed by VIJAIRAJESH K
Date: 2026.06.23 15:05:30 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஸ்ரீரங்கம்

நகல்கள்

1. மேதகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள், திருச்சி பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. அரசு தரப்பில் உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை எண்.1, ஸ்ரீரங்கம்
3. காவல் ஆய்வாளர், ஸ்ரீரங்கம் சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலையம்.